Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 17, 2025

வியாழக்கிழமை 17, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர்: 285 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# தென்கிழக்கு விவகாரம்: அதிரடி கட்டளை பிறப்பிப்பு



பாறுக் ஷிஹான்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் நால்வர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் மாணவன் ஒருவர் உட்பட பல்கலைக்கழக சாரதி என ஆறு பேர் தற்போது வரை சிகிச்சை பெற்று வருவதாக தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்துள்ளார். இதேவேளை மறு அறிவித்தல் வரை கடந்த செவ்வாய்க்கிழமை(15) இரவு விடுதியில் தங்கி கல்வி கற்றுவரும் 1ஆம் வருட பொறியியல் பீட மாணவர்கள் அனைவரும் உடனடியாக விடுதிகளை விட்டு வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய அனைத்து மாணவர்களும் வெளியேறி

தொடர்ச்சி P2

# சுங்கத்தில் சிக்கிய தங்க இளைஞன்

டி.கே.ஜி.கபில

விமானப் பயணி ஒருவர் இலங்கைக்குள் கொண்டு வர முயற்சித்த மிகப்பெரிய தங்கத் தொகை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால், செவ்வாய்க்கிழமை (15) கைப்பற்றப்பட்டுள்ளது.

ரூ.110 மில்லியன் மதிப்புள்ள, 35 கிலோ கிராம் எடையுள்ள தங்கம், கார் உதிரிப் பாகங்கள் போல, தோற்றமளிக்கும் சிறப்பாக தயாரிக்கப்பட்ட 09 சாதனங்களில் மறைத்து வைக்கப்பட்டு, தனது பொருட்களுடன் மறைத்து வைத்து, அதை நாட்டிற்குள் கடத்துவதற்கு முயற்சித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 'அலிபேபி'க்கு மரண தண்டனை



'அலிபேபி' என்றழைக்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வெலிகெபொல பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கொடித்துவக்கு ஆராச்சிலக் வசந்தா என்பவர், ஒருவரைக் கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி புத்திக எஸ். ராகல, இந்த உத்தரவை, புதன்கிழமை (16) அன்று பிறப்பித்துள்ளார்.

வெலிகெபொல ஹட்டங்கல பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஒருவரைக் கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளது.

# தே.ம.ச. உறுப்பினரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு

வெலிகம பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினரான வழக்கறிஞர் தாரக நாணயக்காரவின் வீட்டில் புதன்கிழமை (16) காலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், வழக்கறிஞர் உதய குமார வுட்லர் தெரிவித்துள்ளார்.

சம்மவத்தன்று அதிகாலை 4.39 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

வீட்டின் வாயிலைக் குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், ஏழு துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில், டி-56 துப்பாக்கியால் சுடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

# ரஷ்யாவுடன் தொடர்ந்து வணிகம் செய்தால் பொருளாதாரத் தடை

## மூன்று நாடுகளுக்கு நேட்டோ எச்சரிக்கை

ரஷ்யாவுடன் தொடர்ந்து வணிகம் செய்தால் கடுமையான பொருளாதாரத் தடைகளை சந்திக்க நேரிடும் என்று நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே எச்சரித்துள்ளார்.

பிரேசில், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்டர்களைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே,

" சீனா, இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகளின் தலைவர்கள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதினிடம் உக்ரைன் போர் நிறுத்தத்துக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்த வேண்டும்.

பேச்சுவார்த்தையை தீவிரமாக எடுத்துக்கொள்ளாத ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்து அவர்களின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்கினால், உங்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும்.

இந்த மூன்று நாடுகளும் இதனை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த வரிகள் உங்களை மிகவும் கடுமையாக பாதிக்கும்.

எனவே, இந்த மூன்று நாடுகளின் தலைவர்களும் விளாடிமிர் புட்டினுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து, அமைதிப் பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக இருக்க வேண்டும் என்று அவரிடம் சொல்லுங்கள்.

இல்லையெனில், பிரேசில், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மீது மிகப்பெரிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும்" என்றார்



# ரூ.18 கோடியை ஏப்பம் விட்ட அதிகாரி கைது

அரச வங்கி ஒன்றின் பிரதான அலுவலகத்துக்குப் போலியான ஆவணங்களை கையளித்து 188,825,000 ரூபாயைப் பெற்று, ஏமாற்றிய குற்றச்சாட்டின் பேரில், அந்த வங்கியின் முன்னாள் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

வங்கியின் முன்னாள் கடன் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த (40) வயதுடையவர் ஆவார்.

மோசடி தொடர்பாக கிடைத்த புகாரைத் தொடர்ந்து நடத்தப்பட்ட நீண்ட விசாரணைக்குப் பின்னர்,

தொடர்ச்சி P2

# கழவு அகற்றும் வாகனங்களில் சமூகமளித்த தவிசாளர்கள்



சபேஷ் , ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை கிழக்கு மாகாண பிரதம செயலகத்தினால் மீளப்பட்டுள்ளதால் தவிசாளர்கள் உத்தியோகபூர்வ கடமைகளுக்கு செல்வதற்காக வாகனங்கள் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தொடர்ச்சி P2

# AI யை சோதித்தது COPF



பொது நிதிக் குழு (COPF), ஹன்சார்டைத் தயாரிப்பதற்காக கூகுள் AI (Artificial intelligence) ஒருங்கிணைப்பு அமைப்பை வெற்றிகரமாக சோதித்துள்ளதாக பொது நிதிக் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். குரல் பதிவுகளை உரையாக மாற்றி எடுப்பதற்கு இந்த அமைப்பு பயன்படுத்தப்பட உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், "பாராளுமன்றத்தின் நூற்றாண்டு பழமையான, கையால் எழுதப்பட்ட ஹன்சார்ட் மற்றும் கூட்ட அறிக்கைகளை வீனமயமாக்க FinetechHQ ஆல் @ Google இன் AI ஒருங்கிணைப்பின் COPFஇன் பைலட்

தொடர்ச்சி P2

# குடைக்குள் 'குஷ்'ஷுடன் வந்த தொழிலதிபர் கைது



டி.கே.ஜி.கபில

சுமார் 31.17மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 'குஷ்' போதை பொருளை கட்டுநாயக்கவிமான நிலையத்தில் 'ரெட் சேனல்' வழியாக நாட்டுக்குள் கடத்த முயன்ற இலங்கை பயணி ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் புதன்கிழமை (16) அன்று கைது செய்துள்ளனர்.

மட்டக்குளியாவைச் சேர்ந்த 49 வயதான தொழிலதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்திலிருந்து 50 குடைகளை வாங்கி, அவற்றில் 20 குடைகளைப் பொதியிலிருந்து அகற்றி, அதனை "குஷ்"போதைப் பொருளால் நிரப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

# இளைஞனை கொன்ற முன்னாள் அமைச்சரின் வழக்கு வருகிறது

பதினெட்டு வயது இளைஞனை சுட்டுக் கொன்று, அதைச் செய்ய முயன்றதாக கண்டி மேல் நீதிமன்றத்தில் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கில் குற்றப்பத்திரிகையை இரத்து செய்ய

தொடர்ச்சி P2

## விஜேவீர படுகொலை:

# தொரதெனிய கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) ஸ்தாப தலைவர் ரோஹண விஜேவீரவின் கொலையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அசோக தொரதெனியவுக்கு தொடர்பு இருப்பதாக முன்னிலை சோசலிசக் கட்சியின்

தொடர்ச்சி P2

## சட்டவிரோத வாகன வழக்கு;

# சுஜீவவுக்கு பிணை



சுமார் 100 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சட்டவிரோதமாக ஒழுங்கு செய்யப்பட்ட சொகுசு வாகனம் பற்றிய வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவுக்கு இன்று பிணை வழங்கப்பட்டது.

புதன்கிழமை (16) காலை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரானதை அடுத்து அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## சரத் பொன்சேகா மீதான கொலை முயற்சி

# வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



2006ஆம் ஆண்டு இராணுவத் தலைமையகத்தில் நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்கள் மீதான விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன, புதன்கிழமை(16) அன்று ஒத்திவைத்தார்.

சாட்சியமளிக்க திட்டமிடப்பட்டிருந்த அரசு தரப்பு சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதை அடுத்து வழக்கை ஒத்திவைக்க உத்தரவிடப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க, சாட்சியங்களைத் தொடர புதிய திகதியைக் கோரினார். விசாரணை ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# தென்கிழக்கு விவகாரம்: அதிரடி கட்டளை பிறப்பிப்பு

உள்ளதாக பல்கலைக்கழக தகவல்கள் தெரிவித்துள்ளன.
சிரேஷ்ட மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் வழமை போன்று நடைபெற்று வருவதுடன் குறித்த மோதலானது ஒரே வகுப்பை சேர்ந்த முதலாம் வருட மாணவர்களின் இரு குழுக்களுக்கிடையே விடுதியில் ஏற்பட்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் அம்பாறை ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவர்களை செவ்வாய்க்கிழமை (15) இரவு 8 மணியுடன் விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை (16) அன்று நடைபெறவிருந்த பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளது என தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் இடையே செவ்வாய்க்கிழமை (15) அன்று ஏற்பட்ட மோதலை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.
இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (15) அன்று




இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகள் நடத்தப்படுவதாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.
செய்தி பின்னணி
தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் ஐவர் மற்றும் பல்கலைக்கழக சாரதி ஒருவர்- தாக்குதலுக்குள்ளான நிலையில் செவ்வாய்க்கிழமை (15) அன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
அதன் பின்னர் குறித்த தாக்குதலின் காரணமாக ஒலுவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 5 மாணவர்களில் நால்வர் விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனையைபெறுவதற்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எம்.ஐ. நௌபர் குறிப்பிட்டார்.
இதேவேளை ஒலுவில் வைத்தியசாலையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட 4 மாணவர்களும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தெரிவித்தார்.
மேலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட முதலாம் வருட மாணவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து ஏற்பட்ட மோதல் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுங்கத்தில் சிக்கிய தங்க இளைஞன்

கொழும்பு-14 கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 32 வயது தொழிலதிபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் துபாயில் இருந்து புதன்கிழமை (15) அன்று காலை 8.40 மணிக்கு எமிரேட்ஸ் விமானமான EK-650 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தில் 195 தங்க பிஸ்கெட்டுகள் மற்றும் 13 கிலோ கிராம் நகைகள் அடங்கும்.
விமான நிலைய சுங்க அதிகாரிகளால் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்த விவகாரம் குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# குடைக்குள் 'குஷ்'ஷுடன் வந்த தொழிலதிபர் கைது



அவர் தாய்லாந்தின் பேங்கொக்கிலிருந்து இந்தியாவின் மும்பைக்குச் சென்று, அங்கிருந்து, இண்டிகோ விமானம் 6.E.-1185 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சுங்க அதிகாரிகளின் கவனத்தைத் திசை திருப்பவே அவர் இவ்வாறு பயணித்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அவர் 20 குடைகள் கொண்ட பொதிகளில் 03 கிலோ 117 கிராம் "குஷ்" போதைப் பொருளை மறைத்து வைத்திருந்தார், அவற்றை பறிமுதல் செய்து திறந்த போது, மான நிலைய வளாகம் முழுவதும் போதைப்பொருளின் வாசனை கடுமையாகப் பரவியது.

கைது செய்யப்பட்ட பயணியையும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளையும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இளைஞனை கொன்ற முன்னாள் அமைச்சரின் வழக்கு வருகிறது

மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த சிறப்பு மேன்முறையீட்டு மனுவை செப்டம்பர் 3 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிகள் ஜகத் டி சில்வா, மஹிந்த சமயவர்தன மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் சிறப்பு மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு வந்தது.

பிரதிவாதி சார்பாக ஆஜரான ஜனாதிபதி வழக்கறிஞர் நவீன் மாரப்பன, முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தனது மருத்துவ நிலை காரணமாக நடக்க முடியாத நிலையில் நீதிமன்றத்தில் தெரிவித்தார். சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, மனுவின் உண்மைகளை உறுதிப்படுத்த மற்றொரு திகதியை வழங்குமாறு நீதிபதிகள் குழாமிடம் கோரிக்கை விடுத்தார்.

மாத்தளை தம்புல்கமுவ பகுதியில் 18 வயது இளைஞன் 1999 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனுக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்தக் குற்றப்பத்திரிகைக்கு எதிராக ஜனக பண்டார தென்னகோன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், இந்தக் குற்றப்பத்திரிகை சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்து, 2020 ஆம் ஆண்டு ரிட் உத்தரவைப் பிறப்பித்து, அதை செல்லாததாக்கியது. தனது சிறப்பு மேன்முறையீட்டு மனு மூலம் உயர் நீதிமன்றத்திடம், அந்தத் தீர்ப்பு சட்டவிரோதமானது என்பதால், அதைத் தடை செய்யுமாறு சட்டமா அதிபர் கோரியிருந்தார்.

# கழவு அகற்றும் வாகனங்களில் சமூகமளித்த தவிசாளர்கள்



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (16) அன்று ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேசசபை தவிசாளர் முத்துப்பிள்ளை முரளிதரன் மற்றும் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் சுந்தரலிங்கம் சுதாகரன் ஆகியோர் தங்களது சபைகளில் கழிவுகள் ஏற்றும் உழவு இயந்திரங்களில் சமூகமளித்திருந்தனர்.

இங்கு கருத்து தெரிவித்த ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் முத்துப்பிள்ளை முரளிதரன், "பிரதேச சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் கிழக்கு மாகாண பிரதம செயலகத்தினால் மீள பெறப்பட்டுள்ளது. இதை நாங்கள் பழிவாங்கும் நோக்கமாகவே கருதுகின்றோம். எமக்கு கூட்டத்திற்கு செல்வதற்கு வாகனம் இல்லாத காரணத்தினால் தங்களது சபைக்குச் சொந்தமான கழிவு ஏற்றும் உழவு இயந்திரத்தில் கூட்டத்திற்கு வந்துள்ளேன்" என்றார்.

# ரூ.18 கோடியை ஏப்பம் விட்ட அதிகாரி கைது

சந்தேகத்திற்குரிய முன்னாள் அதிகாரி குற்றப் புலனாய்வு பிரிவின் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு (1) க்கு செவ்வாய்க்கிழமை (15) அழைக்கப்பட்டு, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சந்தேக நபர் குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் மோசடிக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். குற்றப் புலனாய்வு பிரிவின் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு (1) விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

## சட்டவிரோத வாகன வழக்கு;
# சுஜீவவுக்கு பிணை



சேனசிங்கவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, அவர் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றதை உறுதிப்படுத்தும் மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னர் அறிவுறுத்தியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி (SJB) உறுப்பினர்கள் ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசிம், மனோ கணேசன், முஜிபுர் ரகுமான் உட்பட பலர் நீதிமன்ற வளாகத்தில் விசாரணைக்கு வந்திருந்தனர்.

# AI யை சோதித்தது COPF



சோதனையைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதிக சுமை கொண்ட பிரதியெடுப்பவர்கள், பத்துக்கும் மேற்பட்ட குழுக்களில் பல நாட்கள் தாமதத்தை எதிர்கொண்டனர். எனினும், நிமிடங்கள், வார்த்தைப் பதிவுகளை AI உடனடியாக வழங்க முடியும், இது செயல்திறனைப் புரட்சிகரமாக்குகிறது. குழுவிற்கு பாராட்டுகள்," என்று கலாநிதி ஹர்ஷ டி சில்வா தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## விஜேவீர படுகொலை:
# தொரதெனிய கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்

மத்திய குழு உறுப்பினர் இந்திரானந்த டி சில்வா கூறிய குற்றச்சாட்டுகள் காரணமாக தொரதெனிய ஒரு வழக்கைத் தாக்கல் செய்து, தனது பெயரைப் பயன்படுத்துவதைத் தடுக்க தடை உத்தரவைக் கோரினார்.

நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்து தடை உத்தரவு விண்ணப்பத்தை நிராகரித்தது. அந்த வழக்கின் தீர்ப்பு செவ்வாய்க்கிழமை (15) அன்று வழங்கப்பட்டது,

வழக்கின் தீர்ப்பு தொடர்பில் ஊடகங்களுக்குப் பின்வரும் கருத்துக்களை இந்திரானந்த தெரிவித்தார்.

"ரோஹண விஜேவீர கொலை தொடர்பாக தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்களில் அறிக்கைகளை வெளியிடுவதைத் தடைசெய்து மேஜர் ஜெனரல் அசோக தொரதெனியவனா என் மீது தொடுத்த வழக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் நான் விடுவிக்கப்பட்டுள்ளேன்.

இந்த வழக்கு மின்னணு ஊடக பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில், இந்த உண்மைகளை நாங்கள் சுமார் முப்பது ஆண்டுகளாக நாட்டிற்கு வெளிப்படுத்தி வருகிறோம் என்றும், இது ஒரு புதிய விடயம் அல்ல என்றும் எழுத்துப்பூர்வமாகக் காட்டியுள்ளோம்.

மேலும், சிறையில் இருந்து சட்டமா அதிபருக்கு 1996 நவம்பரில், அனுப்பப்பட்ட மனு மூலம் இந்த உண்மைகளை விரிவாக வெளிப்படுத்தினேன்.

மேலும், நான் ஒரு புகைப்படக் கலைஞராக நாடு முழுவதும் உள்ள சித்திரவதை அறைகளுக்குச் சென்று கொல்லப்பட்டவர்களின் புகைப்படங்களை எடுத்துள்ளேன் என்றும் எழுத்துப்பூர்வமாகக் காட்டியுள்ளோம்.

அத்தகையவர்கள் என் கண்களுக்கு முன்பாகக் கொல்லப்படுவதை நான் கண்டேன், அனைத்தும் வெளிப்பட்டுவிட்டன. இப்போது இது "வழக்கில் இருந்து நான் விடுவிக்கப்பட்ட பிறகு, ரோஹண விஜேவீர கொலையில் தொடர்புடைய அனைத்து கொலையாளிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திற்கு நான் சவால் விடுகிறேன்.

குறிப்பாக இப்போது அவர் தலைமையிலான கட்சியின் தற்போதைய தலைவர் ஆட்சியில் இருக்கிறார். அப்படியானால், அதை மேலும் தொடர விடாமல், தங்கள் தலைவரை உயிருடன் கொடூரமாகக் கொன்ற கொலையாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது" என்றார்

# "சர்வதேச தரத்திற்கு விளையாட்டுத்துறையை மேம்படுத்த செயல்படவும்"

சிதறியுள்ள மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களை வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக, விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் விளையாட்டு சங்கங்களுடன் இணைந்து கூட்டு திட்டங்கள் ஊடாக தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டத்திற்கு விளையாட்டை மேம்படுத்துவதற்கு செயற்படுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விளையாட்டுத்துறை அமைச்சுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (16) அன்று நடைபெற்ற இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இங்கு, விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தேசிய இளைஞர் படையணி ஆகியவற்றின் நிறுவன ரீதியிலான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அந்த நிறுவனங்களால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் நாட்டின் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

அத்துடன், விளையாட்டுத்துறையின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை இதன்போது உன்னிப்பாக ஆராய்ந்த ஜனாதிபதி, விளையாட்டுத்துறையின் வளர்ச்சியின் ஊடாக உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று சமூக நலன்களுடன் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் செயல்படுத்தப்படும் "யூத் கிளப்" திட்டம் குறித்தும் ஜனாதிபதி இங்கு கவனம் செலுத்தியதுடன், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு நவீன மற்றும் பலமான தொழிற்கல்வி மையங்களை அபிவிருத்தி செய்வதில் அவதானம் செலுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களை திறம்படவும், வினைத்திறனுடனும் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை



சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, 2025 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை ஆண்டு இறுதிக்குள் முறையாகப் பயன்படுத்துவதன் மூலம், எதிர்பார்த்த பௌதிக மற்றும் நிதி இலக்குகளை அடைய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அருண பண்டார, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன ஆகியோருடன் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்


திருகோணமலையின் கிழக்கே முத்தூரில் ஜவகை நிலம் சூழ அழகுடன் இயற்கை எழில் நிறைந்த செல்வ வளம் கொழிக்கும் செல்வந்த ஊராம் சேனையூர் திருப்பதியில் மூன்னூறு ஆண்டுகளாய் அற்புதங்கள் பல நிகழ்த்தி அருள் தந்து ஆட்சி செய்யும் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகப்பெருமானின் புண்ணிய திருத்தலத்தில் மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை (16) காலை இடம்பெற்றது.

- அ.அச்சுதன்















## உரிமைகளை பாதுகாக்காவிட்டால்

# “போராட்டத்தை முன்னெடுப்போம்”

எஸ்.ஆர்.லெம்பேட்

மக்கள் தமது வளங்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கு பாரிய போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முன் மக்கள் கேட்கின்ற அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் விடையத்தில் அரசு தலையிடா விட்டால் அரசாங்கத்திற்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் புதன்கிழமை(16) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து




தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது வளங்களை அபகரிக்கும் நோக்கத்துடன், கணிய மணல் அகழ்வு தொடர்பாக பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஏற்கெனவே மன்னாரில் நிறுவப்பட்ட 30 காற்றாலைகளைத் தொடர்ந்து, மேலும், 05 காற்றாலைகள் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பல நிறுவனங்கள் இலங்கை மின்சார சபையின் அனுசரணையுடன் முன்னெடுத்து வருகின்றனர். அச் செயல் மன்னார் தீவு மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே, அவர்களுக்கு நாங்கள் மேலும் ஒரு வார கால அவகாசத்தை வழங்குகின்றோம்.குறித்த வேலைத்திட்டத்தை உடனடியாக நிறுத்தி வேறு இடத்திற்குக் காற்றாலை திட்டத்தை மாற்று மாறு கேட்டுக் கொள்கிறோம். நிலங்களைப் பாதுகாக்கும் உரிமை, வாழிடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு உள்ளது.

அது அவர்களின் பிறப்புரிமை. எனவே அந்த நிலங்களை உங்களால் ஒருபோதும் பறித்து எடுக்க முடியாது.

எனவே, இத்திட்டத்தை நிறுத்தாவிட்டால் நாங்கள் இத்திட்டத்தை நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டால் உங்களுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். எனவே உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உடனடியாக மேலதிகமாக அமைக்கப்பட்டு வரும் 5 காற்றாலை திட்டத்தை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# “வடக்கு, கிழக்கை கட்டியெழுப்ப கனடா ஒத்துழைக்கும்”

நிதர்ஷன் வினோத்

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்குக் கனடாவும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கும் என அந்நாட்டுத் தூதுவர் உறுதியளித்துள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனடா தூதுவருக்கும், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு புதன்கிழமை (16) அன்று நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலவரம், காணி பிரச்சினை, வடக்கை இலக்காகக் கொண்டு அமையவுள்ள முதலீட்டு வலயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்குத் தேசிய மக்கள் சக்தியால் நிச்சயம் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும், தமிழ் மக்களும் முழு அளவில் அரசாங்கம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், வடக்கு, கிழக்கை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு கனடாவும் உதவி நல்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதற்கு கனடா தம்மால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்கும் என தூதுவர் பதிலளித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தை போல இல்லாமல் இந்த அரசாங்க ஆட்சியாளர்கள் மிகவும் வித்தியாசமானவர்கள், மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களே தற்போது இருக்கின்றார்கள் எனவும், தற்போதைய ஜனாதிபதியும் சர்வ அதிகாரம் கொண்டவராக இல்லாமல் மக்களின் தலைவனாக செயற்படுகின்றார் எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் முதலீடுகள் செய்வதற்கான சூழல் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

வடக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை இலக்கு வைத்து கனடாவால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், தூதுவரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

மேலும், இலங்கைக்கான கனடா தூதுவர் தமது சேவைக்காலம் முடிவடைந்து இம்மாதத்துடன் தாயகம் திருப்பவுள்ளார். அவர் ஆற்றிய சேவைகளுக்காக தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் நன்றியும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

# மின்சாரம் பாய்ந்ததில் பெயிண்டர் படுகாயம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் கட்டிடம் ஒன்றுக்கு வர்ணம் பூசிக் கொண்டிருந்தவர் மீது மின்சாரம் பாய்ந்ததில் குறித்த நபர் வீதியில் விழுந்து படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதன்கிழமை (16) காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்

வர்ணம் பூசும் தொழிலாளியான காத்தான்குடியைச் சேர்ந்த 58 வயதுடைய சஹாப்தீன் என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

காத்தான்குடி 3ஆம் குறிச்சி ஊர் வீதியிலுள்ள பேக்கரி கட்டிடம் ஒன்றின் மேல் மாடியில் நின்று வர்ணம் பூசி (செயிண்ட்)க் கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.




கீழே விழுந்து படுகாயமடைந்த நபரை கட்டிட உரிமையாளர் மற்றும் பொது மக்கள் இணைந்து உடனடியாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# 144,000 இலங்கையர்கள் வெளிநாடு பயணம்

இந்த ஆண்டு (2025) ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான 6 மாதங்களில் 1,44,000 (1 இலட்சத்து 44 ஆயிரம்) பேர் தொழிலுக்காக வெளிநாடு பயணித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

88,684 ஆண்கள் 55,695 பெண்கள், ஆகக்கூடுதலான 38,806 பேர் குவைத் நாட்டுக்கே சென்றுள்ளனர். துபாய் நாட்டுக்கு 28,973 பேர், 21,958 பேர் கட்டார் சென்றுள்ளனர்.

அதேவேளை, ஜப்பான் 6,073 பேர், தென்கொரியாவுக்கு 3,134 பேர், கடந்த 6 மாத காலங்களில் இலங்கையர் வெளிநாட்டுக்குச் சென்று 3.73 பில்லியன் டொலர்களை அந்நியச் செலாவணியை உழைத்து அனுப்பியுள்ளனர்.

இதன்படி, 2025ஆம் ஆண்டு இறுதியில் 7 பில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிமாற்ற வருவாயை இலங்கை பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.



# மின்னுயர்த்தில் வைத்து மூத்த நடிகையிடம் கைவரிசை



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்து, மூத்த நடிகை தமயந்தி பொன்சேகாவின் பையில் இருந்த பணம் மற்றும், வங்கி தன்னியக்க அட்டைகள் திருடப்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை(15) அன்று இடம்பெற்றுள்ளது.

தமயந்தி பொன்சேகா, வைத்தியரை சந்திக்க மின்னுயர்த்தி ஊடாக வைத்தியசாலையின் மேல் தளத்திற்குச் சென்று கொண்டிருந்த போது மின்னுயர்த்தியில் கூட்டம் அதிகமாக இருந்த நிலையில் திருடன் மிக சூட்சுமமாகப் பைக்குள் கையை விட்டு பணம் மற்றும் ATM அட்டைகளைத் திருடியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மறைந்த நடிகை மாலினி பொன்சேகாவின் சகோதரி தமயந்தி பொன்சேகா, மூத்த திரைப்பட இயக்குநர் பிரசன்னா விதனகேவின் மனைவியாவார்.

# வாசனை திரவியத்தை நுகர்ந்த மாணவர்கள் வைத்தியசாலையில்

ரஞ்சித் ராஜபக்ஷ

வாசனைத் திரவியத்தை (perfume) நுகர்ந்த பாடசாலை மாணவர்கள் மூவர் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் சுவாசிப்பதில் சிரமம் காரணமாக புதன்கிழமை(16) அன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக லிந்துல பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி அசேல மல்லவராச்சி தெரிவித்தார்.

தலவாக்கலை நகரில் உள்ள ஒரு முன்னணி தமிழ்ப்



பாடசாலையொன்றில் 6ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் புதன்கிழமை (16) அன்று ஒரு வாசனை திரவியத்தை கொண்டு வந்து தனது தோழர்கள் மீது தெளித்துள்ளதாகவும், பின்னர் அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த மாணவர்களின் நிலை மோசமாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக குறித்த பாடசாலையின் அதிபரிடம் விசாரித்தபோது, 6 ஆம் வகுப்பு கல்வி கற்கும் மாணவன் ஒருவன் தலைவலிக்குப் பயன்படுத்தப்படும் மருந்தை வாசனைத் திரவியம் என நினைத்துக் கொண்டு வந்து தனது வகுப்பு தோழர்கள் மீது தெளித்துள்ளதாகக் கூறினார்.

# முன்னேறுவதற்கான நடவடிக்கைகளைத் தயாரிக்க வேண்டும்

அண்மையில் வெளியான 2024/2025 ஆம் ஆண்டுக்கான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளில், வடக்கு மாகாணம் தவிர மற்ற அனைத்து மாகாணங்களும் சாதாரண தரப் பரீட்சையில் எழுபது சதவீதத்திற்கும் அதிகமான சதவீதத்துடன் தேர்ச்சி பெற்றுள்ளன.

முக்கியமான பரீட்சைகளின் பெறுபேறுகளை ஏனைய மாகாணங்களுடன் கடந்தகாலங்களில் ஒப்பிடும் போது, வடக்கு மாகாணமே முதலில் நிற்கும். எனினும், இம்முறை வெளியான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது கடுமையான பின்னடைவை வடமாகாண சந்தித்துள்ளது.

ஏனைய மாகாணங்களின் பெறுபேறுகளை ஒப்பிடும் போது, இது மிகவும் நல்ல கல்வி முன்னேற்றம். கணிதம் மற்றும் அறிவியலில் தேர்ச்சி பெற்றவர்களின் சதவீதமும் எழுபது சதவீதத்தைத் தாண்டியுள்ளது. கல்வித் துறையில் இந்த நேர்மறையான முன்னேற்றத்தை அடைவதில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் செயல்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் முக்கியமானவையாகும்.

பெறுபேறுகளை நேர்மறையான அர்த்தத்தில் படித்தால், 237,026 மாணவர்கள் உயர் தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 73.45 சதவீதமாகும். ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 13,392. இது சதவீத அடிப்படையில் 4.15 சதவீதமாகும். 2.34% பரீட்சார்த்திகள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையவில்லை,

உயர்தரத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்கள் கல்வித் துறையில் முன்னேறியிருந்தாலும், உயர்தரத்துக்குத் தகுதி பெறாத மாணவர்களுக்கு சில குறிப்பிட்ட வழிகாட்டுதல் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். ஏனென்றால், தற்போதுள்ள கல்வி முறையின் பக்க விளைவு காரணமாக அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

உயர்தரத்தில் கல்விப்பயிலுவதற்காக போதியளவில் பெறுபேறுகள் கிடைக்காத மாணவர்களில் பலர், தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்வதற்கும் முயற்சித்துள்ளனர். இது தவறான முடிவாகும். எந்தவொரு தோல்விக்கும் தன்னுயிரை மாய்த்தல் தீர்வாகாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இதற்காக ஒவ்வொரு பரீட்சைகளின் போது மட்டுமன்றி, விளையாட்டு மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் தோல்வியடையும் போது, தட்டிக்கொடுக்கவேண்டும். அதனூடாக, தோல்விகளை தாங்கிக்கொள்ளும் மனப்பான்மையையும் வளர்க்கவேண்டும். வெற்றிகளை பெறும்போது தட்டிக்கொடுக்கும்பெற்றோர், தோல்வியடையும் போது, மன ஆறுதல் சொல்லி தேற்றவேண்டும்.

இந்த ஏழை மக்களின் சமூக மனநிலையைப் பற்றி ஆழமாக சிந்தித்து, அவர்களுக்காக ஒரு குறிப்பிட்ட திட்டத்தைத் தயாரிப்பது அவசியம். வெற்றியாளர்களுக்குத் திட்டங்கள் தயாரிக்கப்படுவது போல, தோல்வியுற்றவர்களுக்கும் சில குறிப்பிட்ட திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். உயர்தரத்தில் பயில்வதற்குப் போதியளவான பெறுபேறுகள் கிடைக்காதவர்கள், ஏனைய துறைகளில் கால்வைக்க வேண்டும்.

அவர்களின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டும், நிச்சயமற்றதாக இருக்கக்கூடாது. அவர்களும் எதிர்கால பணியாளர்களின் ஒரு பகுதியாக மாற்றப்பட வேண்டும். இந்தத் தோல்வியடைந்த மாணவர்கள் ஒரு தலைமுறை அறிவுஜீவிகள் என்று சொல்வது பொருத்தமற்றது. அவர்களிடம் வேறு துறைகளில் திறமைகள் இருக்கலாம். அந்தத் திறமைகளை நாம் அடையாளம் கண்டு, அந்தப் பாதையில் முன்னேறுவதற்கான நடவடிக்கைகளைத் தயாரிக்க வேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா?" என கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும், அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது?".

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# "மேல் உலகத்தில் இருந்து சம்பந்தன் நிச்சயம் கண்ணீர் வடிப்பார்"

முருகானந்தன் தவம்

தமிழ்த் தேசத்தின் அடையாளமாக சர்வதேசத்தினால் பார்க்கப்பட்டவரும் தமிழ்த் தேசிய பெருந்தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான இரா.சம்பந்தன் காலமாகி கடந்த 30ஆம் திகதி ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில், அவரை தமிழ்த் தேசமோ அவரின் கட்சியினரோ நினைவு கூரவில்லை என்ற விடயம் சில சம்பந்தன் விசுவாசிகளினால் முன்வைக்கப்பட்ட நிலையில், திருகோணமலை மாவட்ட எம்.பி. குகதாசன். யாழ். மாவட்ட எம்.பி. சிறீதரன் ஆகியோரினால் அவசர அவசரமாக சிறிய நினைவஞ்சலி நிகழ்வுகள் அதன் பின்னர் நடத்தப்பட்டன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 48ஆவது ஆண்டு நினைவு தினம் கூட, அண்மையில் மிக சிறப்பாக தமிழரசுக் கட்சியினராலும், தமிழ் மக்களினாலும் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அதே தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்து காலமான இரா.சம்பந்தனின் முதலாம் வருட நினைவு தினம் தமிழரசுக் கட்சியினாலோ தமிழ் மக்களினாலோ நினைவு கூரப்படாமல் மறக்கப்பட்டமை சம்பந்தனின் தலைமைத்துவம் தொடர்பான பல்வேறு கேள்விகளையும் விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளது.

5 பெப்ரவரி 1933இல் பிறந்து 1977 ஜூலை 21ஆம் திகதி நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு 15,144 வாக்குகள் பெற்று வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானது முதல் 30 ஜூன் 2024 வரை தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாதவராக தமிழர் தலைவராக விளங்கிய சம்பந்தனின் மரணத்திற்குப் பின்னர் அவருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை இதற்கு முன்னரான எந்தவொரு தமிழ் அரசியல் தலைவருக்கும் ஏற்பட்டிருக்கவில்லை

சம்பந்தன் காலமாகி கடந்த 30-06-2025 ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில், அவரை தமிழினமும் அவரின் உயிர் மூச்சான இலங்கை தமிழரசுக் கட்சியின் அதன் தற்போதைய தலைவர்களும் முற்றாக மறந்து விட்டதுதான், வெறுத்து விட்டது தான் காலக்கொடுமை.

சம்பந்தன் மரணித்து ஒரு வருடத்திற்குள் அவரை அனைத்து தரப்பினரும் முற்றாகவே மறந்து விட்டனர். வெறுத்து விட்டனர். எந்தவொரு இடத்திலும் அவரின் முதலாம் ஆண்டு நினைவாக எந்தவொரு நிகழ்வுகளும் இடம்பெறவில்லை. எந்தவொரு ஊடகத்திலும் ஒரு சிறு ஆக்கமாவது அவரைபற்றிய பிரசுரமாகவில்லை. அவரின் கட்சியினர் கூட நினைவஞ்சலிகளை நடத்தவில்லை. இது தமிழர்களின் மறைந்த எந்தவொரு தலைவருக்கும் ஏற்படாத துர்ப்பாக்கியம். அவமானம், புறக்கணிப்பு.

சம்பந்தனை அவரது கட்சியினரே நினைவு கூர வில்லையென விமர்சனங்கள் எழுந்த நிலையில், அவரின் திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய எம்.பி.யுமான குகதாசன், சம்பந்தனின் முதல் வருட நினைவு தினம் வந்து, ஒரு வாரத்தின் பின்னர் அவசர அவசரமாக ஒரு சிறிய நினைவு நிகழ்வை ஒருவருக்கும் தெரியாமல் நடத்தி முடித்துள்ளார். ஆனால், அதே குகதாசன் முன்னாள் எம்.பி., தங்கதுரையின் 28ஆவது ஆண்டு நினைவு தினத்தைக் கடந்த 5ஆம் திகதி சிறப்பாக நினைவு கூர்ந்திருந்தார்.

தங்கதுரையை மறக்காத குகதாசன் தனக்கு அரசியல் வாழ்வுதந்த சம்பந்தனை மறந்து விட்டார். குகதாசன் மட்டுமல்ல, அவரின் தமிழரசுக் கட்சியின் கூட, சம்பந்தனை மறந்து விட்டனர். சம்பந்தனை நினைக்கக் கூட, அவர்கள் விரும்பவில்லை.

தமிழினத்தின் பெரும் தலைவரெனக் கருதப்பட்ட சம்பந்தன், தமிழ் மக்களினாலும் அவரின் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியினாலும் மறக்கப்பட அல்லது நினைவுகூர விருப்பப்படாத நிலைமை ஏன் ஏற்பட்டது?

சம்பந்தன் 1977இல் பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். 1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி, தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்ததுடன், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர். 3 மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தனும் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டெம்பர் 7இல் இழந்தார்

1989 பாராளுமன்றத் தேர்தலில் சம்பந்தன் ஈஎன்டிஎல்எஃப், ஈபிஆர்எல்எஃப், ரெலோ, தவிகூ கூட்டமைப்பின் வேட்பாளராகத் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார். தோல்வியடைந்தார். இவ்வாறான நிலையில், 2002இல் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட போது விடுதலைப் புலிகளினால் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தனை பிரபாகரன் நியமித்தார். அப்போது புலனாய்வு பொறுப்பாளர் பொட்டு அம்மான் உட்பட விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் பலருக்கு சம்பந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக அறிவிப்பதில் உடன்பாடு இருக்கவில்லை.

பலரது தெரிவும் ஜோசப் பரராசசிங்கமாகவே இருந்தது. ஆனால், பிரபாகரன், சம்பந்தன் துரோகி என்பது உங்களை விட எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், சம்பந்தனை வெளியில் விடுவதை விட இந்தக் கூட்டமைப்பிற்குள் சம்பந்தனை இழுத்து வைத்திருப்பது தான் பொருத்தமாக இருக்கும் என கூறியதாகத் தகவல்கள் உண்டு. பிரபாகரன் கூறியது போலவே, 2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கும் வரை புலிகளுக்குப் பின்னால் இழுபட்டுத் திரிந்த சம்பந்தன் யுத்தம் முடிவுக்கு வந்தபோது, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என பாராளுமன்றத்தில் முழங்கி அவர்களைத் தோற்கடித்ததற்காக மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு நன்றி தெரிவித்ததுடன், பிரபாகரனின் கொலைப் பட்டியலில் தனது பெயர் முதலாவதாக இருந்ததாகவும் கூறி தனது சிங்கள விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். அன்றிலிருந்து அவர் தமிழ் மக்களினால் வெறுக்கப்படுபவராக மாறினார்

அது மட்டுமல்ல, மேல் தட்டு வர்க்க அரசியலை முன்னெடுத்த அவர் தமிழ் மக்களிடம் சென்று மக்களின் வலிகளைக் கேட்டவரும் அல்ல, அதை உணர்ந்தவரும் அல்ல, தனது அரசியல் வாழ்க்கையில் அதிக நாட்களை கொழும்பை வாழ்விடமாகக் கொண்டு சிங்கள தேசத்தின் வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டிருந்தார். அதனால் தமிழ் மக்களின் வலியும் வேதனையும் அவருக்குப் புரியாதிருந்ததுடன், தமிழர்களின் சுதந்திர வேட்கையையும் ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்கவில்லை. சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினராக, எதிர் கட்சித் தலைவராக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த காலங்களில் சந்தித்த ஜனாதிபதிகளில் சந்திரிகாவிற்கு அடுத்தபடியாக ரணில் விக்ரமசிங்கவிற்கே அதிக ராஜ விசுவாசத்தைக் காட்டினார். ரணில் மற்றும் மைத்திரி அரசு கொண்டு வந்த ஆட்சியில் சம்பந்தன் ஒரு பங்காளியாகவே இணைந்திருந்தார். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், சம்பந்தன் ஒரு சிங்கள அரசியல்வாதி போலவே நடந்து கொண்டார்.

அதனால்தான் சம்பந்தனின் உடலை இறுதியாகப் பார்வையிட்டு இறுதி அஞ்சலி செலுத்துவதற்குக் கூட, தமிழினம் தயாராக இருக்கவில்லை. சம்பந்தனின் உடல் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படும் போது, வீதியின் இருமருங்கும் சம்பந்தனின் உடலுக்கு தூவுவதற்காய் பூக்களோடு மக்கள் காத்திருக்கவில்லை. தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனது உடலை வைத்தபோது, மண்டபம் நிரம்பி மக்கள் அலைமோதவில்லை. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனையளிக்கப்பட்டு தடுப்பு முகாமில் மரணமடைந்த சாந்தனின் பூதவுடல் அவரது சொந்த ஊரான வல்வட்டித்துறைக்கு கொண்டுவரப்பட்டபோது, வவுனியாவில் இருந்து ஒவ்வொரு ஊரிலும் பூதவுடல் சுமந்து வந்த வாகனத்தை பல்லாயிரக்கணக்கான மக்கள் மறிந்து பூக்கள் தூவி, அஞ்சலி செலுத்தினார்கள். சாந்தனின் இறுதி நிகழ்வில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பங்கேற்றிருந்தார்கள் சாந்தனை கௌரவித்த தமிழினம் சம்பந்தனை கண்டுகொள்ளவேயில்லை. அவரின் முதலாம் ஆண்டு நிறைவையும் தமிழ் மக்கள் நினைவு கூர விரும்பவில்லை.

சிங்கக் கொடி சம்பந்தனாகவும் சிங்கள ஆட்சியாளர்களின் விசுவாசியாகவும் தமிழ் தேசிய போராட்டத்தின் விரோதியாகவும் அதனால் தமிழ் மக்களின் துரோகியாகவும் இருந்ததால் சம்பந்தனை தமிழ் மக்கள் நினைவு கூர விரும்பவில்லை. ஆனால், தமது கட்சியின் முன்னாள் தலைவரான, வழிகாட்டியான, அரசியல் வாழ்வு கொடுத்தவரான சம்பந்தனை நினைவு கூர, அஞ்சலி செலுத்த இலங்கை தமிழரசுக்கட்சி,அதன் தலைவர்கள் கூட ஏன் விரும்பவில்லை என்பதே இன்றுள்ள கேள்வி. சம்பந்தனை மறந்து விட்டனரா?, சம்பந்தனை அந்தளவுக்கு வெறுத்து விட்டனரா? அல்லது அவரை நினைக்கக்கூட விரும்பவில்லையா? சம்பந்தனின் தவறான தீர்க்கதரிசனத்தால் கட்சிக்குள் வந்து இன்று கட்சியின் பொறுப்பை ஏற்று தமிழரசின் அழிவுக்கும் இழிவுக்கும் காரணமாக உள்ளவர்கள் கூட சம்பந்தனை மறந்து விட்டனர். இதுதான் இவர்கள் சம்பந்தனுக்கு செலுத்திய நன்றிக்கடன்.

சம்பந்தனின் உயிரற்ற உடலை உரிமை கொண்டாடி அவரின் இறப்பில் கூட அரசியல் செய்த, சம்பந்தனின் உடல் தீயுடன் சங்கமமாகும்வரை உடன்கட்டை ஏறத் தயாரானவர்கள் போல் ஒட்டிக்கொண்டே இருந்த வடக்கு,கிழக்கு மாகாண தமிழரசுப் பிரகிருதிகள் கூட ஒரு வருடத்திற்குள் சம்பந்தனை தமது நினைவிலிருந்தே துடைத்தெறிந்து விட்டனர். மேல் உலகத்தில் தனது ஒரு வருட நிறைவில் இருக்கும் சம்பந்தன் "என்னை அனைவரும் மறப்பார்கள் என்பது தெரியும் .ஆனால் இவ்வளவு விரைவாக மறப்பார்கள் என்பது தெரியாமல் போய் விட்டதே,நான் உயிராக நேசித்த கட்சியும் நான் அரசியல் ஊட்டி வளர்த்தவர்களும் என்னை நினைக்கக்கூட விரும்பவில்லையே" என்று நிச்சயம் கண்ணீர் வடிப்பார்.

## கடிதங்கள்

### வீடு, வீதிகளில் விரிசல்

தலவாக்கலை பேருந்து நிலையத்திற்கு மேலே உள்ள தலவாக்கலை பண்டாரநாயக்க சதுக்கத்தில் வசிக்கும் 6 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர், அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் வீதிகளில் ஏற்பட்டுள்ள சரிவு அபாயத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களது வீடுகள் மற்றும் வீடுகளுக்குச் செல்லும் வீதி சிறிது காலமாகவே இவ்வாறு காணப்படுவதாகவும் சமீபத்திய நாட்களில் அப்பகுதியில் பெய்த கனமழையால் இந்த சரிவு மேலும் கூடியுள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் அனைவரும் இதற்குத் தீர்வு வழங்குவதாக உறுதியளித்த போதும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய ஆட்சியாளர்களும் இது குறித்து விசாரிக்க வரவில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

வீடுகளின் சுவர்கள் மற்றும் வீதிகளில் கடுமையான விரிசல் ஏற்பட்டுள்ளது, விரிசல்கள் வழியாகக் மழைநீர் கசிவதைத் தடுக்க பொலித்தீன் மூலம் மூடியிருப்பதைக் காணமுடிந்தது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


- ரஞ்சித் ராஜபக்ஷ





## இளைஞர்களின் வெளிநாட்டு

# குடிபெயர்வு ஓட்டம்: ஒரு பெரும் சவால்

எம்.எம்.ரஷ்பா,
உளவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


இலங்கையின் சமகால சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையில், இளைஞர்களின் வெளிநாட்டு குடிபெயர்வு ஒரு கவலைக்கிடமான நிலையாக உருவெடுத்து வருகிறது. கல்வி, தொழில் வாய்ப்பு, வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றம் ஆகிய காரணங்களை முன்வைத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து இளைஞர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து வருகின்றனர். இது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு பெரும் சவாலாக இருப்பது அன்மையைப் புள்ளிவிவரங்கள் மூலம் தெளிவாகிறது.

சமகால நிலைவரம் இலங்கையில் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, அன்றைய அரசியல் குழப்பம் மற்றும் நாணய மதிப்பிழப்பு காரணமாக நாட்டின் உள்நாட்டு வேலைவாய்ப்பு சந்தை மிக மோசமான நிலையை எட்டியது. இதன் விளைவாக, 2023ஆம் ஆண்டு மட்டும் 311,269 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக நாடு விட்டுப் புறப்பட்டனர் (SLBFE, 2024). இந்த எண்ணிக்கையில், பெரும்பாலானோர் 20 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருந்துள்ளனர்.

2024ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஜனவரி-ஏப்ரல்) மட்டும் 125,000க்கும் மேற்பட்டோர் வேலை நோக்கி வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உயர்வான எண்ணிக்கைகள் நாட்டின் மனிதவளச் சேமிப்பில் ஒரு பெரும் சிதைவாகப் பார்க்கப்படுகின்றன.

### குடிபெயர்விற்கான முக்கிய காரணிகள்

1. வேலைவாய்ப்பின் பற்றாக்குறை: பல பட்டதாரிகளும் தொழில்நுட்ப நிபுணர்களும் தகுந்த வேலைவாய்ப்பு இல்லாமை காரணமாக வெளிநாடுகளை நாடுகின்றனர்.

2. அரசியல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையின்மை: நிரந்தர தீர்வு இல்லாத பொருளாதார மேலாண்மை, ஊழல், அரசியல் குழப்பம் போன்றவை இளைஞர்களில் நம்பிக்கையிழப்பை ஏற்படுத்துகின்றன.

3. வாழ்க்கைத் தரம் மற்றும் எதிர்கால நம்பிக்கையின் குறைவு: தாயகத்தில் ஒரு நிலையான வாழ்க்கை அமைத்துக்கொள்வது கடினம் என உணரும் இளைஞர்கள் வெளிநாடுகளில் வாழ்வதையே தேர்வு செய்கின்றனர்.

4. கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு இல்லாமை: இலங்கையில் கல்வி முடித்த இளைஞர்கள் தங்களது தகுதிக்கேற்ப பணியிடங்களை பெறுவதில் சிரமம் அனுபவிக்கின்றனர்.

### விளைவுகள்

இளைஞர்களின் வெளிநாட்டு குடிபெயர்வு, பலவிதமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

* மனிதவள இழப்பு (Brain Drain): திறமைமிக்க தொழில்நுட்ப நிபுணர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் போன்ற இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலை, நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான ஆதாரங்களை சிதைக்கின்றது.
* பொருளாதார வீழ்ச்சி: உள்நாட்டு தொழிற்துறைகளில் திறமைமிக்க பணியாளர்கள் குறைவது, உற்பத்தித் திறனை குறைக்கும்.
* நாட்டின் சமூக அமைப்பில் இடர்ப்பாடுகள்: குடும்பங்களின் பிளவுகள், குழந்தைகளின் உளவியல் நிலைமை ஆகியவை பாதிக்கப்படுகின்றன.
* சமூக நம்பிக்கையின் வீழ்ச்சி: இளைஞர்கள் நாட்டில் எதிர்காலம் இல்லை என நம்புவதால், சமூக நம்பிக்கையில் குறைவு காணப்படுகிறது.

### அனுகூலங்களும் காணப்படலாம்

இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலை செய்வதன் மூலமாக, வெளிவாரி வருமானம் (foreign remittance) நாட்டிற்கு கிடைக்கிறது. 2023ஆம் ஆண்டு மட்டும் சுமார் 5.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் remittance ஆக வந்துள்ளது (CBSL, 2024). இது நாட்டின் வினியோக மதிப்பீடு (foreign reserves) அதிகரிக்க உதவுகிறது. ஆனால், இது ஒரு நிலையான தீர்வாக கருத முடியாது.

### தீர்வுத் திட்டங்கள்

இளைஞர்கள் நாட்டிலேயே நிலையாக வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் கோரிக்கையாகிறது.

* வேலைவாய்ப்புகள் உருவாக்கல்: தனியார் மற்றும் பொது துறையில் வேலைவாய்ப்புகள் பெருக்கப்பட வேண்டும்.
* திறன் மேம்பாட்டு திட்டங்கள்: தொழில்நுட்ப மற்றும் தொழில்முனைவோர் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
* நலன்கள் உறுதி செய்தல்: இளைஞர்களுக்கான கல்வி, சுகாதாரம், தொழில் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.
* அரசியல் நிலைத்தன்மை: நீடித்த, திறந்த மற்றும் பரந்த அரசியல் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இளைஞர்கள் எந்த நாட்டின் எதிர்காலத் தூண்களாக இருக்கின்றனரோ, அவர்கள் தாயகத்தை விட்டு வெளியேறுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும் போது, அந்த நாடு தனது வளர்ச்சி பாதையில் தடைகளை சந்திக்க நேரிடும். இளைஞர்களின் வெளிநாட்டு குடிபெயர்வு ஓட்டம் நாட்டிற்கு நன்மையைவிட தீமையை அதிகம் தரும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இளைஞர்களுக்கு நம்பிக்கையான, பாதுகாப்பான, வளமான தாயகத்தை வழங்க அரசாங்கம், நிறுவனங்கள், சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கின்றது.



## இலங்கையில்

# போசாக்குக் குறைபாடுள்ள சிறுவர்களின் உளவியல் தாக்கங்கள்




சயந்தினி ஆனந்த ராசா,
உளவியல் சிறப்புக்கலை,
யாழ். பல்கலைக்கழகம்,


இலங்கையின் எதிர்காலத் தூண்களாகத் திகழ வேண்டிய சிறுவர்கள் போசாக்குக் குறைபாட்டின் கொடிய பிடியில் சிக்கித் தவிப்பது ஒரு சமூக ரீதியிலான அவலமாகும். ஒரு உளவியல் துறை மாணவி என்ற வகையில், போசாக்குக் குறைபாடு என்பது வெறும் உடலியல் ரீதியான சவால்களை மட்டும் கொண்டதல்ல மாறாக அது ஒரு குழந்தையின் ஒட்டு மொத்த உளவியல் ஆரோக்கியம், அறிவாற்றல் வளர்ச்சி, சமூகப் பிணைப்புகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் எனப் பலவற்றையும் பாதிக்கக் கூடிய ஒரு ஆழமான உளவியல் சிக்கல் என்பதை நான் ஆழமாக உணர்கிறேன். போசாக்குக் குறைபாடுள்ள சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் அதன் பரவல், குறிப்பாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், மற்றும் இந்த நிலையின் உளவியல் தாக்கங்கள் குறித்து இக் கட்டுரையில் விரிவாக ஆராய்வோம்.

“ஆரோக்கியமே உண்மையான செல்வம்” என்ற ஒரு பழைமையான கிரேக்கப் பழமொழி, உடல் நலத்தின் முக்கியத்துவத்தை அழுத்தமாக வலியுறுத்துகிறது. ஒரு குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சரியான ஊட்டச்சத்து அத்தியாவசியம். போசாக்குக் குறைபாடு என்பது உடலின் சீரான வளர்ச்சிக்கும், செயல் பாட்டிற்கும் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் போதிய அளவில் கிடைக்காத ஒரு நிலையைக் குறிக்கிறது. இது உயரம் குறைதல் (stunting), மெலிந்திருத்தல் (wasting), எடைகுறைதல் (underweight) மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் எனப் பலவடிவங்களில் வெளிப்படலாம்.

### உலகளாவிய போசாக்குக் குறைபாட்டின் நிலை

உலகளவில், போசாக்குக் குறைபாடு ஒரு பெரும் பொது சுகாதாரப் பிரச்சினையாக வேநீடிக்கிறது. யுனிசெஃப் (UNICEF) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO)ஆகியவற்றின் அறிக்கைகளின்படி, உலகளவில் சுமார் 149 மில்லியன் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் வளர்ச்சிகுன்றியவர்களாக (stunted) உள்ளனர். இது அவர்களின் வயதுக்கு ஏற்ற உயரத்தைப் பெறமுடியாமல் இருப்பதைக் குறிக்கிறது. மேலும், 45 மில்லியன் குழந்தைகள் மெலிந்த நிலையில் (wasted) உள்ளனர். அவர்களில் 13.6 மில்லியன் குழந்தைகள் கடுமையான மெலிந்த நிலையில் உள்ளனர். இது மரண அபாயத்தை அதிகரிக்கும் ஒரு நிலை. இந்த புள்ளி விவரங்கள் போசாக்குக் குறைபாடு உலகின் பல பாகங்களில் மில்லியன் கணக்கான குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பதைக் காட்டுகிறது. “பசியால் வாடும் ஒருவருக்கு, ஒரு துண்டு றொட்டி என்பது ஒரு சாம்ராஜ்யத்திற்கு சமம்" என்று மகாத்மாகாந்தி குறிப்பிட்டது போல, உலகம் முழுவதும் உணவுப் பாதுகாப்பு இல்லாத பல குடும்பங்களில் குழந்தைகளுக்குப் போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதே இல்லை.

இலங்கையில் போசாக்குக் குறைபாட்டின் தீவிரம் இலங்கையைப் பொறுத்த வரையில் ,உலகளாவிய போசாக்குக் குறைபாட்டின் தாக்கங்களில் இருந்து தனித்து இருக்கவில்லை. சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் கிட்டத்தட்ட 17 பேர் வளர்ச்சி குன்றியவர்களாக (stunted) உள்ளனர். இது, குழந்தைகளின் நீண்டகால ஊட்டச்சத்து குறைபாட்டைப் பிரதிபலிக்கிறது. மேலும், 15 குழந்தைகள் குறைந்த எடையுடன் (underweight) காணப்படுகின்றனர். அதாவது அவர்களின் வயதுக்கு ஏற்றஎடையைப் பெறவில்லை. மிக முக்கியமாக மூகுழந்தைகள் கடுமையான மெலிந்த நிலையில் உள்ளனர். இந்த நிலை குழந்தைகள் தீவிரமான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. இது உடனடி மருத்துவக் கவனிப்பு தேவைப்படும் ஒரு நிலை. இந்த புள்ளி விவரங்கள் இலங்கையில் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள், ஊட்டச்சத்துக் குறைபாட்டின் தாக்கங்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

இலங்கையில் போசாக்குக் குறைபாடு பரவலாகக் காணப்படும் மாவட்டங்கள் குறித்துப் பார்க்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்



உள்ள மாவட்டங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களில் போசாக்குக் குறைபாடுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை தேசிய சராசரியை விட அதிகமாகக் காணப்படுகிறது. இதற்குப் பல காரணிகள் இருக்கலாம். தசாப்த கால யுத்தத்தின் வடுக்கள், அதிலிருந்து இன்னும் முழுமையாக மீளாத பொருளாதாரப் பாதிப்புகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள், போதிய சுகாதார வசதிகளுக்கான அணுகல் குறைவு, மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வின்மை ஆகியவை இம் மாகாணங்களில் போசாக்குக் குறைபாடுஅதிகரிக்கக் காரணங்களாக அமைகின்றன. “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது போல,குழந்தைகளின் ஆரோக்கியம், அவர்களது உணவுப் பழக்கவழக்கங்களில் பிரதிபலிக்கிறது. ஆனால், இங்குள்ள பல குழந்தைகளுக்கு ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவுகிடைப்பதில்லை என்பதே கசப்பான உண்மை.

### போசாக்குக் குறைபாட்டின் ஆழமான உளவியல் தாக்கங்கள்

போசாக்குக் குறைபாடு ஒரு குழந்தையின் உளவியல் நலனில் ஏற்படுத்தும் பாதிப்புகள் ஆழமானவை, நீண்டகாலவிளைவுகளைக் கொண்டவை.

*அறிவாற்றல் வளர்ச்சிப் பாதிப்பு:*

குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான சத்துக்கள் கிடைக்காதபோது,அவர்களின் அறிவாற்றல் திறன் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இது கற்றல் குறைபாடுகள்,கவனச்சிதறல், நினைவாற்றல் குறைபாடு, குறைந்த நுண்ணறிவு ஈவு (IQ) மற்றும் பள்ளி செயல்திறன் குறைவு ஆகியவற்றுக்கு வழிவகுக்கும். “சிறுதுரும்பும் பல் குத்த உதவும்" என்பது போல, ஒவ்வொரு ஊட்டச்சத்தும் குழந்தைகளின் மூளை மற்றும் நரம்புமண்டலத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியம். “மூளை சரியாக வளர்ந்தால் மட்டுமே ,திறமைகள் முழுமையாக மலரும்" எனஅறிஞர் ஒருவர் குறிப்பிட்டது இங்கு பொருந்திப் போகிறது.

*மன நிலை மற்றும் நடத்தை மாற்றங்கள்:*

போசாக்குக் குறைபாடுள்ள குழந்தைகள் பெரும்பாலும் சோர்வு, எரிச்சல், சோம்பல், மனச்சோர்வு மற்றும் பதட்டம் போன்ற மனநிலை மாற்றங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்குக் கவனம் செலுத்துவது கடினமாக இருக்கலாம், மேலும் சமூக தொடர்புகளிலும் ஆர்வமின்றி இருக்கலாம். இது சமூகவிலகல் மற்றும் தனிமைப்படுத்தலுக்கு வழிவகுக்கும். அவர்களின் நடத்தை பொதுவாக அமைதியின்மை அல்லது அதிகப்படியான அசைவுகளுடன் இருக்கலாம்.

*சமூக- உணர்ச்சி வளர்ச்சிப் பாதிப்பு:*

ஆரோக்கியமான சமூக உறவுகளை வளர்த்துக் கொள்ளும் திறன், குழந்தையின் உணர்ச்சி ரீதியான வளர்ச்சிக்கு அத்தியாவசியம். போசாக்குக் குறைபாடுள்ள குழந்தைகள் தங்கள் சகாக்களுடன் பழகவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும், மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளவும் சிரமப்படலாம். இது அவர்களின் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும். “அடுத்தவர் முகம் பார்க்கின் அழகு குறைவு” என்பதுபோல, சமூகத்திலிருந்து விலகியிருக்கும் குழந்தைகள், தங்கள் மீது ஒருவித தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம்.

தமிழ்நாடு

# “விஜய்க்கு தனி விமானம் கொடுத்ததே பாஜக தான்”

## தமிழ்நாட்டின் சபாநாயகர் பேச்சால் பரபரப்பு

விஜய்க்கு தனி விமானம் வாங்கிக் கொடுத்ததே பா.ஜ.க.தான் என்றும் அவர் பா.ஜ.கவின் ஆள் தான் என்றும்" 01) தமிழ்நாடு சபாநாயகர் அப்பாவு கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட சபாநாயகர் அப்பாவு, செய்தியாளர்களிடம் போசியபோதே அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, “விஜய்யின் மூன்று நிமிடப் பேச்சை கேட்டேன். ஜெயராஜ் பென்னிக்ஸ் வழக்கில் இறந்தவர் பெயரைக்கூட சரியாகச் சொல்ல தெரியவில்லை. யார் வசனம் எழுதி கொடுத்து அவர் பேசுகிறார் என்று தெரியவில்லை.

அஜித்குமார் வழக்கு விடயத்தில் சம்பந்தப்பட்ட அத்தனை பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல்வரே அந்த குடும்பத்திடம் மன்னிப்பு கேட்டிருக்கிறார். அப்படி இருக்க, விஜய் யார் சொல்லி இப்படி பேசுகிறார் என்று தெரியவில்லை.

மேலும், புஸ்ஸி ஆனந்த் பாண்டிச்சேரியில் அரசியல் செய்யும்போது, அவருக்கு அமித்ஷாவுடன் தொடர்பு கொண்டு, விஜய் கேட்காமலே அவருக்கு ஒய்-பிரிவு பாதுகாப்பை கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு தனி விமானம் வாங்கிக் கொடுத்தது பா.ஜ.க.தான். விஜய்யின் அம்மா கிறிஸ்துவர். சிறுபான்மையினர் வாக்கை உடைக்கத்தான் அவரை பா.ஜ.க. களத்தில் இறக்கி இருக்கிறது" என்றும் அப்பாவு கூறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பாட்னா

### 173 பேருடன் சென்ற விமானம்

## விபத்தில் இருந்து நூலிழையில் தப்பியது

பீகார் மாநிலத்தில் அமைந்துள்ள பாட்னா விமான நிலையத்தில் இண்டிகோ விமானம் தரையிறங்கும்போது, விபத்தில் இருந்து நூலிழையில் தப்பிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தலைநகர் டில்லியில் இருந்து பாட்னாவுக்கு நேற்றிரவு இண்டிகோ விமானம் 6E 2482, மொத்தம் 173 பயணிகளுடன் புறப்பட்டது. பாட்னா விமான நிலைய ஓடுபாதையில் நிர்ணயிக்கப்பட்ட தரையிறங்கும் ஓடுபாதை தளத்துக்கு முன்னரே விமானத்தை விமானிகள் தரையிறக்கினர்.

விமானம் தரையிறங்கிய பின்னர், மீதமுள்ள ஓடுபாதையின் நீளம் விமானத்தை நிறுத்த போதுமானதாக இருக்காது என்பதை உணர்ந்த விமானி, உடனடியாக விமானத்தை மேல் நோக்கி எழும்ப



செய்திருக்கிறார். மீண்டும் வானை நோக்கி பறந்த விமானம் மூன்று முறை வட்டமடித்தது.

பின்னர் சிறிதுநேரம் கழித்து பாதுகாப்பாக ஓடுபாதையில் விமானம் தரையிறங்கியது. அதில் இருந்த 173 பயணிகளும் மயிரிழையில் உயிர் தப்பி இருக்கின்றனர்.

சரியான நேரத்தில் சமயோசிதமாக விமானிகள் எடுத்த முடிவு விமானம் விபத்தில் இருந்து தப்பிக்க காரணமாக அமைந்தது. ஒப்பீட்டு அளவில் பாட்னா விமான நிலைய ஓடுபாதை குறுகிய தூரத்தை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

### கேரள தாதியின்

## மரண தண்டனையை ஒத்திவைத்தது ஏமன்



கேரளா மாநிலத்தைச் சேர்ந்த நிமிஷா பிரியாவுக்கு புதன்கிழமை (16) அன்று நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மரண தண்டனை இந்திய அரசு மேற்கொண்ட முயற்சி காரணமாக ஒத்திவைக்க ப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கேரளாவின் பாலக்காட்டை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (வயது 38). இவர் ஏமன் நாட்டை சேர்ந்த ஜவுளி வியாபாரி தலால் அய்டோ மெஹ்தியுடன் இணைந்து புதிய மருத்துவமனையை தொடங்கினார். பின்னர் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலையில் மெஹ்திக்கு, நிமிஷா மயக்க ஊசியை செலுத்தினார். இதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த வழக்கில் நிமிஷாவுக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட இருந்தது. மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை தவிர்க்க இந்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதையடுத்து, மரண தண்டனை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடகம்

### கடந்த ஆண்டும் 1.4 கோடி குழந்தைகளுக்கு

# “ஒரு தடுப்பூசி கூட செலுத்தப்படவில்லை”

உலகம் முழுவதும் கடந்த 2024ஆம் ஆண்டும் 1.4 கோடி குழந்தைகளுக்கும் அதிகமானோருக்கு ஒரு தடுப்பூசி கூட செலுத்தப்படவில்லை என்று ஐ.நா. சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முந்தைய ஆண்டும் இதே எண்ணிக்கையிலான குழந்தைகள் தடுப்பூசி செலுத்தப்படாமல் இருந்தனர் என்றும் அவர்கள் கூறினர்.

2020-இல் கொரோனா பெருந் தொற்று பாதிப்பின்போது அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தின்போது குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்தப்படுவது தடைப்பட்டது. அதன் பின்னர் குழந்தைகளுக்கான தடுப்பூசி செலுத்தப்படுவது முந்தைய நிலைக்கு இன்னும் திரும்பவில்லை.

இந்நிலையில், சர்வதேச அளவில் தடுப்பூசி அளிக்கப்பட்டது தொடர்பான ஆய்வு அறிக்கை செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. அதுகுறித்து உலக சுகாதார அமைப்பு, யூனிசெப்ஃப் அமைப்பு அதிகாரிகள் கூறுகையில், ‘கடந்த ஆண்டு ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 89 சதவீதத்தினர் டிப்தீரியா, டெட்டானஸ், கக்குவான் இருமல் ஆகியவற்றின் முதல் தவணை தடுப்பூசியைப் பெற்றனர். 85 சதவீதத்தினர் மூன்று தவணை தடுப்பூசிகளைப் பெற்றனர். இதே அளவிலேயே 2023இல் தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தது.

இந்த வகை தடுப்பூசிகள் ஆண்டுதோறும் 35 லட்சம் முதல் 50 லட்சம் மரணங்களைத் தடுக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தட்டம்மை தடுப்பூசிகள் உலகம் முழுவதும் 76 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதை 95 சதவீதத்தை எட்டினால்தான் அதிகப்படியான பரவல் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க முடிவும். கடந்த ஆண்டு 60 நாடுகளில் தட்டம்மை பாதிப்பு அதிகரித்திருந்தது.

அமெரிக்காவில் தட்டம்மை பாதிப்பு கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது. ஐரோப்பாவில் கடந்த ஆண்டு சுமார் 125,000 பேர் தட்டம்மையால் பாதிக்கப்பட்டனர்’ என்று தெரிவித்தனர்.

கீவ்

## உக்ரைன் பிரதமர் திடீர் இராஜினாமா

### சர்வதேச அரசியலில் பரபரப்பு



உக்ரைனின் பிரதமர் டெனிஸ் ஷிம்ஹால் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பது, அரசியல் உலகில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

ரஷ்யா உக்ரைன் இடையே கடந்த 3 ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது. இந்த சூழ்நிலைக்கு மத்தியில், அவர் எடுத்த முடிவுகள் நாட்டு மக்கள் மனதில் பல்வேறு கேள்விகளை உருவாக்கியுள்ளன.

பல வருடங்களாக உக்ரைன் அரசைக் கொண்டு சென்ற பிரதமர் டெனிஸ் ஷிம்ஹால், ரஷ்யா போரின் நடுவிலும் முக்கியமான முடிவுகள் பல எடுத்து வந்தவர். தற்போது நடைபெறும் அரசியல் மாற்றங்கள், புதிய நிர்வாக கட்டமைப்பை உருவாக்கும் பணிகள், பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அழுத்தங்கள் ஆகியவை அவரது இராஜினாமாவுக்கு காரணமாக கூறப்படுகின்றன.

### வட மேல் 21 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டம்:

# கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி சாம்பியன்



■ எம்.யூ.எம்.சனூண்

வட மேல் மாகணத்துக்குட்பட்ட பாடசாலைக ளுக்கிடையிலான 21 வயதுகுட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் புத்தளம் தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி சம்பியனானது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் திங்கட்கிழமை (14) அன்று நடைபெற்ற இத்தொடரில் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட பாடசாலைகளிலிருந்து சுமார் 15 பாடசாலை அணிகள் பங்கேற்றிருந்த நிலையில், இறுதிப் போட்டியில் மாதம்பை அல் மிஸ்பா முஸ்லிம் மகா வித்தியாலயத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி சம்பியனாகி மாகாணங்களுக்கிடையிலான போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளது.

இவ்வணியைப் பயிற்றுவித்த விளையாட்டு பொறுப்பாசிரியர் என்.எம்.அப்ராரின் அயராத முயற்சியால் இந்த வெற்றி இலக்கு அடையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவுக்கு எதிரான இறுதி 2 டெஸ்ட்களில்

## “விளையாட முடியும்”



இந்தியாவுக்கு எதிரான தொடரின் இறுதி இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட முடியுமென இங்கிலாந்தின் ஜொஃப்ரா ஆர்ச்சர் தெரிவித்துள்ளார்.

காயங்கள் காரணமாக நான்கு ஆண்டுகள் டெஸ்ட் கிரிக்கெட்டைத் தவறவிட்டிருந்த 30 வயதான ஆர்ச்சர், இந்தியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டிலேயே தனது மீள்வருகையை புரிந்திருந்தார்.

நான்காவது, ஐந்தாவது டெஸ்ட் போட்டிகள் மூன்று நாள்கள் இடைவெளியில் ஆரம்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவர்கள் அனுமதித்தால் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தன்னால் விளையாட முடியுமெனத் தெரிவித்த ஆர்ச்சர், ஆஷஸ் தொடருக்கான குழாமில் இடம் பெறுவதற்கான தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யவுள்ளதாகக் கூறியுள்ளார்.

### இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்டுக்கான

## இங்கிலாந்து குழாமில் லியம் டோஸன்



இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாமில் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் லியம் டோஸன் உள்ளடக்கப் பட்டு ள்ளார்.

இடது கையில் விரலொன்றில் முறிவொன்றையடுத்து தொடரிலிருந்து விலகிய ஷொய்ப் பஷிரையே 35 வயதான டோஸன் குழாமில் பிரதியிட்டுள்ளார்.

இங்கிலாந்துக்காக இறுதியாக 2017ஆம் ஆண்டிலேயே டெஸ்ட் போட்டியொன்றில் டோஸன் விளையாடியிருந்தார்.

இதேவேளை, இங்கிலாந்துக் குழாமிலிருந்து வேகப்பந்து வீச்சாளர்களான சாம் குக், ஜேமி ஒவெர்ட்டன் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## தனித்து பயிற்சியில் ஈடுபடும் டியர் ஸ்டீகன்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் கோல் காப்பாளரான மார்க்-அன்ட்ரே டியர் ஸ்டீகனின் எதிர்காலம் குறித்த நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் தனியே பயிற்சியில் ஈடுபடுகிறார்.

கடந்த 2014இல் பார்சிலோனாவில் இணைந்த 33 வயதான டியர் ஸ்டீகன், 2016ஆம் ஆண்டுலிருந்து முதன்மை கோல் காப்பாளராக இருந்தார். எனினும் இப்பருவகாலத்தில் முன்னுரிமையில் பின்னணியில் காணப்படுகின்றார்.

கழகத்தை விட்டு வெளியேறுமாறு டியர் ஸ்டீகனை பார்சிலோனா கூறியதாகவும் ஆனால் கழகத்தில் இருக்கும் விருப்பத்தையே இதுவரையில் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், அடுத்தாண்டு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடரில் ஜேர்மனியின் முதன்மை கோல் காப்பாளராக இருக்க விரும்பும் டியர் ஸ்டீகனுக்கு தொடர்ச்சியான போட்டிகள் தேவைப்படுமென்ற நிலையில், பார்சிலோனாவில் அவர் விளையாட மாட்டார் என தெளிவாகும்போது தனது நிலையை அவர் மாற்றுவாரென பார்சிலோனா எதிர்பார்க்கின்றது.

ஜோன் கர்சியாவை பார்சிலோனா கைச்சாத்திட்டுள்ளதுடன், புதிய இரண்டாண்டு ஒப்பந்தத்தை வொஜெக் ஸிஸென்ஸ்கியும் பார்சிலோனாவுடன் கைச்சாத்திட்டிருந்தார். இது தவிர இன்னொரு கோல் காப்பாளரான இனகி பெனாவும் குழாமில் காணப்படுகின்றார்.

## பிறைன்ஃபோர்ட்டில் இணைந்த ஹென்டர்சன்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான பிறைன்ஃபோர்ட்டில் இரண்டாண்டு ஒப்பந்தமொன்றில் இங்கிலாந்தின் மத்தியகளவீரரான ஜோர்டான் ஹென்டர்சன் கைச்சாத்திட்டுள்ளார்.

நெதர்லாந்துக் கழகமான அஜக்ஸிலிருந்து முன்னர் 35 வயதான ஹென்டர்சன் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 17, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.